**மிருகக்காட்சிசாலை அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியம் - 2022**

-----------------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மிருகக்காட்சிசாலை அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை “திட்டமிட்டு பேணுதல்” நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 506,595,988 ஆன போதிலும் அதற்காக சமர்ப்பிக்கப்பட்ட வருமான அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட மீளாய்வர்டின் மொத்த | 2022 ஆம் ஆண்டின் ஒட்டுமொத்த வருமானம் ரூபா 535,090,363 ஆன போதிலும் அதில் உள்ளடக்கப்பட்ட வற் வரி தொகை மற்றும் ஏனைய திருத்தங்களை மேற்கொண்ட பின்னரான தேறிய வருமானத்தை கணக்கு வைத்துள்ளமையை | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள வருமானங்கள் வருமான அறிக்கையுடன் இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருமானம் ரூபா 535,090,363 ஆனையால் ரூபா 28,494,375 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | குறிப்பிட்டுக் கொள்கின்றேன். | |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட நினைவுச் சின்ன விற்பனை நிலையத்தின் மீளாய்வாண்டின் விற்பனை பெறுமதி ரூபா 5,850 ஆனபோதிலும் அதன் விற்பனை கிரயம் ரூபா 1,041,402 என குறிப்பிடப்பட்டிருந்தது. இலவசமாக வழங்கப்பட்ட ரூபா 1,132,320 பெறுமதியான 12,108 நினைவுச் சின்ன வலயங்களின் மொத்த இலாபத்தை கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்காது விற்பனை கிரயத்திற்கு சேர்க்கப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தமை அதற்கு காரணம் என அவதானிக்கப்பட்டது. | விற்பனை கிரயத்தை சரியாக சீராக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | விற்பனை கிரயம் சரியாக கணிப்பிடப்பட வேண்டும். |
| (இ) | 2022 டிசம்பர் 31 ஆம் தேதி உள்ளபடியாக திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் நிதியத்தின் மீதி ரூபா.1,977,037,550 ஆன போதிலும் நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் அந்த மீதி ரூபா.2,009,522,432 எனுமாறு ரூபா.32,484,882 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. பல வருடங்களாக முன் கொண்டு வரப்படும் இந்த வேறுபாட்டினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீள செலுத்தப்படும் விலைக்கேள்வி வைப்புகள் மற்றும் ஒப்பந்த பிடி காசுகளை பெற்றுக் கொள்ளல் போன்ற கொடுக்கல் வாங்கல்களின் அடிப்படையில் இந்த வேறுபாடு ஏற்படுகின்றன. | நிதி நிலைமை கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள நிதியத்தின் மீதி திறைசேரியில் உள்ள மீதியுடன் ஒப்பிடப்பட்டு வேறுபாடு தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2018 செப்தம்பர் 22 ஆந் திகதிய MSDW/F/1/3/GEN ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்திற்கு உரிய மிருகக்காட்சி சாலைகளில் மற்றும் சபாரி பூங்காக்களுக்கு | அமைச்சின் செயலாளர் மற்றும் அரச நிதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு விடயங்களை தெளிவு படுத்தி உரிய நடவடிக்கை எதிர்காலத்தில் எடுக்கப்படும் என்பது. | பெறமதி சேர் வரி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய நுழைவுச்சீட்டு கட்டணத்திற்கு வரி கணிப்பீடு சேர்க்கப்பட்டு அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செல்லும் போது அரசு நிதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள கட்டணத்திற்கு பார்வையாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட பெறமதி சேர் வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காது நுழைவுச்சீட்டு கட்டணத்தில் வரி தொகை கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அந்த விதத்தில் மீளாய்வாண்டு அளவிடப்பட்ட ரூபா 471,171,300 தொகையான நுழைவுச்சீட்டு கட்டணத்திலிருந்து கழிக்கப்பட்டு செலுத்தப்பட்ட ரூபா 56,406,780 தொகையான பெறுமதி சேர்வரி காரணமாக நிதியத்திற்கு அந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | | |
| (உ) | 2022 திசெம்பர் 31 ஆம் தேதி உள்ளபடியாக தேசிய மிருகக்காட்சி சாலைகள் திணைக்களத்தின் பிரதான மருந்து களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 393,650 பெறுமதியான 157 மருந்து வகைகள் மருந்து பொருள் இருப்பிற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிலவும் அனைத்து இருப்புக்களும் பௌதீக மெய்மையாய்விற்கு உட்படுத்தப்பட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் I பகுதியின் 15.1 பந்தியின் கீழான வழிகாட்டல் இலக்கம் 04 | | | | |
| (அ) | 03 ஆம் வழிகாட்டி | ஒவ்வொரு காலாண்டில் இறுதியிலும் நிதியத்தின் செயல் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டு இயலுமான அளவில் நிதியத்தின் பிரதான பணிகள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 07 காலாண்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு அரச நிதி திணைக்களம் மற்றும் தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்திற்கு பிரதிகளுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டு முதல் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | உரிய காலாண்டு அறிக்கைகள் உரிய முறையில் தயாரிக்கப்பட்டு குறித்த பிரிவுகளுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 4.2 மற்றும் 5.2 (ஆ) வழிகாட்டிகள். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க தயாரிக்கப்பட வேண்டிய நிதி செயலாற்றல் கூற்றுக்கு பதிலாக வருமான கூற்று ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டு முதல் உரிய மாதிரிக்கமைய சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நியமத்தின் பிரகாரம் நிதி செயலாற்றல் கூற்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 5.1 ஆம் வழிகாட்டி | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்று அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையினை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | உங்களுடன் வருடாந்த செயலாற்றல் அரிசியை வரை போன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 6(ஆ) ஆம் வழிகாட்டி | சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை . | 2023 ஆம் ஆண்டு முதல் மும்மொழிகளிலும் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். என்பது | மும்மொழிகளிலும் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | 07 ஆம் வழிகாட்டி மற்றும் நிதிப்பிரமாணம் 877(2)(இ) | கணக்குகளுடன் வரவு செலவுத்திட்ட இணக்க கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டுக்காக சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிதிக்கூற்றுக்களுடன் வரவு செலவுத் திட்ட இணக்க பதிவேடு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 429,958,380 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 558,081,259 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 128,122,879 தொகையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் பொது மிருகக்காட்சிசாலையை பார்வையிடுவதற்கு வருகைதந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்த காரணத்தால், நுழைவுக் கட்டண வருமானம் அதிகரித்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உலக உயிரியல் பூங்காக்கள் மற்றும் நீர் வாழ் உயிரின காட்சிக் கூடங்களின் சங்கத்தினால் 2015 ஆம் ஆண்டில் | 2015 ஆம் ஆண்டில் நாளதுவரையாக்கப்பட்டுள்ள நெறிமுறை கட்டமைப்பின் பிரகாரம் மரண விசாரணை அறிக்கைகளை சமர்ப்பிக்காத மரணங்களுக்கான திட்டவட்ட | மரண விசாரணை நடத்தப்படாமைக்கு காரணங்களை குறிப்பிட்டு மரணமடைந்த விலங்குகள் |

| | | | |
|---|---|---|---|
| | நாளதுவரையாக்கப்பட்ட விலங்கு நலன்புரி மூலோபாய கோவையில் உள்ளடக்கப்பட்ட நெறிமுறை கட்டமைப்பு 11 ஆம் பந்தியின் பிரகாரம் காப்பகத்தில் உள்ள விலங்குகளின் மரணம் தொடர்பில் மரண விசாரணை மேற்கொள்ளாதிருக்க முக்கியமான காரணம் ஒன்று உள்ள சந்தர்ப்பம் நீங்கலாக ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் மரண விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும், 2021 ஆம் ஆண்டு 13 வகைகளுக்குரிய 18 விலங்குகளின் மரணங்களுக்கு முக்கியமான காரணமென்று உள்ளதாக சான்றுபடுத்தப்பட்டிராததுடன் மரண விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காரணங்கள் அல்லது மரணம் இடம்பெற்ற விதம் தொடர்பில் அறிந்திருந்தமை மரண விசாரணை மேற்கொள்ளமைக்கு காரணமாக அமைந்திருந்தது. | தொடர்பில் அறிக்கையொன்று பேணப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட விலங்கு மதிப்பீட்டு அறிக்கையில் 13 விலங்குகளின் மரணங்கள் உள்ளடக்கப்பட்டிராமையும், மரணமடைந்த 09 விலங்கு வகைகளில் அளவுகளில் மாற்றங்கள் காணப்படுகின்றனமை அவதானிக்கப்பட்ட காரணத்தால் விலங்கு மதிப்பீட்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட விலங்குகளின் மரணங்களில் எண்ணிக்கையை சரியானது என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாது. | இரண்டு வாரங்களுக்கு குறைந்த விலங்கு மரணங்கள் அறிக்கைக்கு எடுக்கப்படாமை இதற்கு காரணமாக அமைந்திருந்ததுடன் மரணமடைந்த விலங்குகள் அவ்வாறு மரணம் அடைவதற்கு தாக்கம் அளித்த காரணங்களை திட்டவட்டமாக அறிந்திருந்தால் மரண விசாரணை மேற்கொள்ளப்படுவதில்லை. | மரண விசாரணை மேற்கொள்ளாதிருப்பதற்கு உரிய காரணங்களை குறிப்பிட்டு மரணமடைந்த விலங்குகள் தொடர்பில் அறிக்கையொன்று ஒன்று பேணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2015 ஆம் ஆண்டில் நாளதுவரையாக்கப்பட்ட விலங்கு நலன் புரி மூலோபாயங்களில் உள்ளடக்கப்பட்ட நெறிமுறை கட்டமைப்பின் 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விலங்குகளை காட்சிப்படுத்தும் நியமத்தின் பிரகாரம் விலங்குகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வகையில் விலங்குகள் காட்சிப்படுத்தப்பட வேண்டும். எனினும் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கு உரிய பரிசோதனைகளில் 09 சந்தர்ப்பங்களில் மரணமடைந்த விலங்குகள் தொடர்பில் காலம் கடந்து இனம் கண்டிருந்தமை, ஐந்து விலங்குகள் எதிரிகளின் தாக்குதல்களுக்கு உள்ளாகி மரணம் அடைந்திருந்தன, ஒட்டுமொத்த விலங்குகளின் மரணங்கள் 156 இல் 96 மரணங்களில் விலங்குகளின் நோய்களை இனம்காணவோ சிகிச்சை அளித்தலோ இடம்பெற்றிருக்காமல் மற்றும் சிறு விலங்குகளின் மரண வீதாசாரம் 8.3 வீதத்திலிருந்து 26.38 சதவீதம் வரை உயர்வடைந்திருந்தமை போன்ற விடயங்களுக்கு இணங்க விலங்குகளின் பாதுகாப்பு தொடர்பில் போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்படவில்லை. | சில விலங்குகளின் உடல்கள் மரணத்தின் பின்னர் துரிதமாக பழுதடையும். எதிரிகளின் தாக்குதல்களுக்கு உட்பட்டு மரணம் அடைதல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுகிறது.<br>விலங்கு பொறுப்பாளர்களின் நாளாந்த குறிப்புகள் மற்றும் கால்நடை மருத்துவரினால் இடப்படும் நாட்குறிப்புகள் ஆகியவற்றை ஒப்பிடும்போது சில அறிக்கையிடல் தவறுகள் இடம் பெற்றுள்ளதுடன் சிகிச்சை வழங்காமைக்கான காரணம் திடீர் மரணங்கள், சிறிய விலங்குகளின் மரணங்கள் மற்றும் வயது முதிர்ந்த விலங்குகளின் மரணம் ஆகியன ஆகும்.<br>சிறிய பறவை குஞ்சுகளின் மரணங்கள் மற்றும் பிறக்கும் முன்னர் இறந்த (still births) விலங்குகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டிராததுடன், சிறிய விலங்கு ஒன்று பிறக்கும்போது அந்த விலங்கு தொடர்பில் செயல்படும் விதம் தொடர்பிலான வேலை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | விலங்குகளின் சுகாதார மற்றும் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் சிகிச்சை நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | 2019 ஆம் ஆண்டில் ரூபா.1,398,000 கிரயத்திற்கு 04 வெள்ளை நிற மயில்கள் கொள்வனவு செய்யப்பட்டு 2022 ஆம் ஆண்டில் இனப்பெருக்க நடைமுறை ஊடாக அவற்றை பெருக்குவதற்கு | நுரையீரல் நோயினால் பாதிக்கப்பட்டு மயில் குஞ்சொன்றும் எஞ்சியவை மற்றும் பெரிய மயில் coccidiosis எனும் நோயினாலும் மரணம் அடைந்துள்ளன. protozoa | விலங்குகளின் சுகாதார மற்றும் சிகிச்சை முறைமைகள் மேம்படுத்தப்பட வேண்டும்.<br>5. |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள போதிலும் 2022 ஜூலை மாதம் 31 ஆந் திகதி முதல் 2022 அக்டோபர் மாதம் 03 ஆம் தேதி வரையான 02 மாதங்கள் எனும் சிறிய காலப்பகுதியினுள் அவற்றுள் ஒரு மயில் மற்றும் ஐந்து மயில் குஞ்சுகள் மரணமடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | எனும் நோய் காவி மூலம் விலங்குகளின் உறுப்புக்களை பாதிக்கும் இந்த நோய்க்கு சிகிச்சை அளிப்பது மிகவும் கடினமானது ஆகும். | |
| (உ) | தொற்றும் நோய் ஏற்பட்ட விலங்குகளை ஆரோக்கியமான விலங்குகளில் இருந்து அகற்றி தனிமைப்படுத்துவதற்கு தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் தனிமைப்படுத்தல் நிலையம் ஒன்று இல்லாது இருந்ததுடன் கோணபல எனும் இடத்தில் நிர்மாணிக்கப்பட்டவாறு உள்ள தனிமைப்படுத்தும் நிலையத்தின் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் தொற்றும் நோய்கள் ஏற்படும் விலங்குகளை தனிமைப்படுத்தும் பணிக்காக நிலையம் கோணபல பண்ணையில் நிர்மாணிக்கப்பட்டவாறு உள்ள தனிமைப்படுத்தும் நிலையத்தின் 70 சதவீத பணிகள் நிறைவடைந்துள்ளன. | உரிய காலத்தினுள் நிர்மாணங்களை நிறைவு செய்து முறையாக விலங்குகளின் தனிமைப்படுத்தல் நிலையத்தினை பேணி செல்ல வேண்டும். |
| (ஊ) | 2015 ஆம் ஆண்டில் நாளதுவரையாக்கப்பட்ட விலங்கு நலன்புரி மூலோபாயங்களில் உள்ளடக்கப்பட்ட நெறிமுறை கட்டமைப்பின் 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள காட்சிப்படுத்தல் நியமங்களில் பிரகாரம் மிருகக்காட்சிசாலையில் உள்ள விலங்குகளுக்கு சுயாதீனமாக நடத்தை கோலங்களுக்கு தேவையான சூழல் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். எனினும், 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 20 ஆம் தேதி வரையிலும் தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் தமது கூண்டில் தனியாக வசிக்கும் 15 | 2022 ஆம் ஆண்டு இறுதிக்காலப் பகுதியில் பல்வேறு சர்வதேச விலங்கு பரிமாற்றல் நிகழ்ச்சி திட்டங்களுக்கு அடித்தளம் அமைத்து உள்ளோம். இதன் கீழ் கருப்பு நிற ஜகுவாருக்கு தற்போது துணையொன்று கிடைத்துள்ளது. | நெறிமுறைகளுக்கு இணங்க விலங்குகளின் நலன்புரி நடவடிக்கைகளை மேம்படுத்த வேண்டும். |

விலங்குகள், துணைகள் இல்லாதது வசிக்கும் 35 விலங்குகள் மற்றும் பெண் துணை இல்லாத வசிக்கும் 21 விலங்குகள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் 2022 மார்ச் 09 ஆன் திகதி மரணம் அடைந்த ஜப்பான் குரங்கு (பெண் விலங்கு) 15 வருடங்களாக தனித்து வாழ்ந்திருந்த காரணத்தால் மன உளைச்சல் நிலைமைக்கு Depressive Condition உள்ளாகி புற்றுநோய் செல்கள் Urine Cancer அதிகரித்தமைக்கு தாக்கம் அளித்து உள்ளதாக மரண பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கு அமைய விலங்குகள் தனிமையாக வாழ்வதால் அவற்றின் உள மற்றும் உடல் சுகாதாரத்துக்கு பாரியத் தாக்கம் ஏற்படக்கூடும் என்பது அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) நிதியத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு மதிப்பீடு 2022 டிசம்பர் 23 ஆம் திகதி தேசிய வரவு செலவு திட்ட திணைக்களத்தின் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் மீள திருத்தப்பட்டிருந்தது. எனினும், அந்த திருத்தப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டினுள் உள்ளடக்கப்பட்டுள்ள பாதிடப்பட்ட செலவினங்கள் மற்றும் உள்ளபடியான செலவினங்கள் ஆகியவற்றை ஒப்பிடும்போது 03 செலவின தலைப்புகளில் 0.9 சதவீதம் முதல் 39.4 சதவீதம் வரையான அங்கீகரிக்கப்பட்ட | இந்த ஆண்டு முதல் இந்நிலைமையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டினை விஞ்சி செலவினம் மேற்கொள்ளப்பட கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டினை விஞ்சி செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | கல்வி மற்றும் ஆராய்ச்சிக்காக ஆரம்ப வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட ரூபா.25,000 ஆன தொகை திருத்தப்பட்ட மதிப்பீட்டின் மூலம் ரூபா 1,025,000 வரையிலும் ரூபா 1,000,000 இனால் அதிகரிக்கப்பட்டு இருந்த போதிலும் ஆண்டினுள் கல்வி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் தொடல்பில் எதுவித செலவினம் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. . | கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான போதிய நிதி ஒதுக்கீடு இல்லாது இருந்தமையால் நிதி ஒதுக்கீட்டினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள போதிலும் 2022 ஆம் ஆண்டில் போதிய காலம் இல்லாது இருந்தமையால் நிதி ஏற்பாட்டினை பயன்படுத்த முடியாது போயுள்ளது. | நடைமுறைக்கு சாத்தியமான அடிப்படையில் பாதிடப்பட்ட நிதியேற்பாட்டினை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |